
3 Rgd. No. M. 2194



# மாத்வமித்ரன்

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| | | |
|---|---|---|
| Vol. 5 | அங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 2 |
| | பாத்ரபத மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (14—9—32) | நெ 2 |





12 SEP 19..

பொருளடக்கம்.



| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீ மத்வாசாரியார்.) | 33 |
| 2. | ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 41 |
| 3. | ஸ்ரீ மத்வமத கிரந்தங்கள். | 43 |
| 4. | ஓர் கண்டனம். | 45 |
| 5. | ஸ்ரீ பகவத்கீதை த்வைதபரம்தான். | 47 |
| 6. | மணிமஞ்ஜரி. (ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார். | 49 |
| 7. | சங்கர லீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ்.) | 53 |
| 8 | காடக உபநிஷத். | 57 |
| 9. | அ[illegible] | 61 |
| 1[illegible] | [illegible] | 62 |
| | [illegible] | 63 |
| | | 64 |



ஆசிரியர்
[illegible] ரங்கநாதாசாரியர்.

SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

**R. Bindumathava Rao,**
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,

20 டவுன்ஹால் ரோடு, மதுரை.

R. ரகூத்தமராவ் மானேஜர்

---

ஸ்ரீஉத்தராதிமடம் ஸமஸ்தானாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள் அருளிச்செய்த

ஸ்ரீகீதாதத்வம் (முதற்பாகம்.)

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், ஜீவப்ரம்ம அபேதம் ஜீவர்களின் பாரதந்திரியம் தாரதம்மியங்கள் முக்தி ஸ்வரூபம், ஆகிய இந்த ஐந்து மத்வமத ப்ரமேயங்களைப்பற்றியும் இவைகளுக்கு இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் பலவகை ஆக்ஷேபணைகளுக்கு தக்க சமாதானங்களையும் பலவகை திருஷ்டாந்த பூர்வமாய் ஸ்ரீ பகவத்கீதை வசனங்களைக்கொண்டு அவைகளின் சரியான த்வைதபரமான அர்த்தபிசாரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன, உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் இந்த புஸ்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்களுக்குமட்டில் விலை ரூ. 1—8—0. மேற்கண்ட முதல் மூன்று ப்ரமேயங்களடங்கிய 3 சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் வெளியா... அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தனி சஞ்சி... க்ரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டர் செய்... வர்கட்கு ரூ. 1-14-0க்கு வி.பி.பி. செய்யப்படும், இதர சஞ்சிகை... அவைகள் வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்ப... ஒவ்வொருமாத்வரும் அவசியம் படித்துணரவேண்டிய இப்புத்தகத்திற்... உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்திரன், வியாஸவிலாசம்,
கும்பகோணம்.


ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

2 SEP

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्त्वतो भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(காபி ரைட்) (முன் தொடர்ச்சி.)

### பதினான்காவது அத்யாயம்.

பீமசேனர் முதலில் பூர்வதிக்கை ஜயித்தார். பிறகு தக்ஷிணதிக்கை ஜயித்தார். பிறகு வருணனால் சம்ரக்ஷிக்கப்பட்டதான மேற்கு திக்கையும் உத்தர திக்கையும் ஜயித்தார். பூர்வஜன்மத்தில் ராவணன் கும்பகர்ணன் இவ்விருவர்களாயிருந்து தற்போது பீமசேனருடைய தாயின்சகோதரியின் பிள்ளைகளாய் பிறந்த சிசுபாலன் தந்தவக்ரன் இவர்களை பீமசேனர் ஜயித்தார். ராவணன் கும்பகர்ணன் இவர்களில் ஜ்யேஷ்டனான ராவணன் தமகோஷ ராஜனுடைய மகனாய் சிசுபாலனென்ற பெயருடன் பிறந்தான். கும்பகர்ணன் கரூச தேசத்திற்கு அரசனாய் பீமசேனரின் மற்றொரு சிறியதாயார் குமாரனாய் தந்தவக்ரனென்று பிறந்தான். இந்த சிசுபாலன் தந்தவக்ரன் இவர்களை பீமசேனர் ஜயித்தார். வாஸுதேவனின் குமாரனான பௌண்ட்ரக வாஸுதேவனையும் பீஷ்மகராஜனின் மகனான ருக்மியையும் ஜயித்தார். பூர்வம் மனுஷ்யனை பக்ஷித்துவந்த இல்வலன் என்றதைத்யன் ப்ரதானாக்னியின் மகனான சுசி என்னும் அக்கினியின் அம்சமுள்ளவனாய் குண்டினபட்டணத்திற்கு அரசனாய் ருக்மிஎன்று பிறந்தான். ருக்மி

...யின் தந்தையா... ...ஷ்மகாராஜன் ராகுவின் அம்சம்பெற்றவன். அப்பா... மித்ரனென்ற சூரியனின் அம்சம் பெற்றவன். பீஷ்ம...ஜனின் தம்பிகளான க்ரதன் கைசிகன் இவர்கள் பரதாணக்னியின் மக்களான பவமானன் சுசி என்றிரண்டு அக்னிகளின் அம்சம் பெற்றவர்கள். பந்துவான பீமசேனனின் பலத்தை பரீக்ஷை செய்வதற்காக சல்யராஜன் அவனுடைய சகோதரியின் குமாரனை பீமசேனனுடன் யுத்தம்செய்தான். அவன் சிசுபாலாதிகளைப்போல் பீமசேனரால் பராஜயமடைந்தான். பீமசேனர் யுத்தத்தில்வீரனான ஏகலவ்யன் என்றவனை ஜயித்தார். இவ்வாறே பீமசேனரால் எல்லா அரசர்களும் பராஜயமடைந்தனர். இந்திரனுடைய குமாரனான அர்ஜுனன் பீமசேனரின் பாஹு வீரியத்தால் ஸம்ரக்ஷிக்கப்பட்டவனாய் பலிஷ்டனாகி மற்றஅரசர்களை ப்ரயத்தனமின்றி ஜயித்தான். பீமசேனர் ஸால்வராஜனையும் ஹம்ஸடிம்பிகர்களையும் ஜயித்து அர்ஜுனனுடன் ஹஸ்தினபுரம் வந்துசேர்ந்தார். பீமசேனர் அர்ஜுனன் இவர்களின் பாஹுவீரியத்தைப்பார்த்து யுதிஷ்டிரன், குந்திதேவி நகுலன் சகாதேவன் இவர்களுடன்கூடி சந்தோஷப்பட்டான். பீஷ்மாசாரியாருடன்கூடிய விதுரனும் பட்டணம் தேசம் இவைகளிலுள்ள சாதுஜனசமூகங்களும் இந்த பீமசேனன் அர்ஜுனன் இவர்களின் வீரியத்தைக்கண்டு ஆனந்தமடைந்தனர். எல்லாயாதவர்களும் பீமசேனர் செய்த திக்விஜயத்தைக்கேட்டு அதிகமாய் சந்தோஷித்தனர்.

## ஹஸ்தினாவதிக்கு அக்ரூரனின் தூது.

துரியோதனன்முதலான பாண்டவர்களின்விஷயத்தில் திருதராஷ்டிரன் நெறிதவறியிருக்கிறானென்றும் அவனுடைய பிள்ளைகளுக்கு அதீனனாயிருக்கிறானென்றும் ஸ்ரீகிருஷ்ணர் அறிந்து அக்ரூரனுடைய வீட்டுக்குச் சென்று திருதராஷ்டிரனுக்கு நற்புத்தியைச் சொல்ல அவனை ஹஸ்தினபுரத்திற்கு போகும்படி ஸர்வோத்தமனான ஸ்ரீகிருஷ்ணர் ஆக்ஞாபித்தார். அந்த அக்ரூரன் ஹஸ்தினபுரம் சென்றான். அக்ரூரன் அங்கு திருதராஷ்டிரனாலும் பீஷ்மாசாரியருடன்கூடிய எல்லா கௌரவர்களாலும் விசேஷமாய்



பூஜிக்கப்பட்டவனாய் பாண்டவர்களின் விஷயத்தில் கௌரவர்களுக்கு இருந்துவரும் மனப்பான்மையை அறிவதற்காக ஹஸ்தினாவதியிலேயே சில மாதகாலம் வசித்தான். ஞானியான அக்ரூரன் குந்தி விதுரன் இவர்களின் மூலமாயும் தன் புத்தியாலும் பாண்டவர்களுக்கு சிநேகிதர்கள் இன்னார் சத்துருக்கள் இன்னார் உதாசீனர்கள் இன்னாரென்பதை அறிந்து திருதராஷ்டிரன் அவனுடைய பிள்ளைகளுக்கு அதிகமாய் அதீனனாயிருக்கிறானென்று தெரிந்துகொண்டு பேதயுக்தமான நல்ல வார்த்தையை நன்றாய் பேசினான்: ஹே திருதராஷ்டிரனே. உன்னுடைய பிள்ளைகளிடமும் உன் தம்பி பாண்டுராஜனின் பிள்ளைகளிடமும் அவரவர்களின் யோக்யதைப்படி நீ ஸரியாய் இருந்துவந்தால் நல்ல கீர்த்தியையும் உத்கிருஷ்டமான தர்மத்தையும் அர்த்தம் காமம் இவைகளையும் அடைவாய். வாஸுதேவனான ஸ்ரீகிருஷ்ணர் தேவர்கள் முதலான எல்லா யாதவர்களுடன்கூடி உன்னிடம் உத்தமமான ப்ரீதியைச் செய்வார். அந்த பகவானுடைய ப்ரீதியால் ஹே ராஜச்ரேஷ்டனே. நிச்சியமாய் தர்மார்த்த காமங்களால் கூடிய மோக்ஷத்தை நீ அடைவாய். உன்னுடைய பிள்ளைகளிடமும் பாண்டவர்களிடமும் இதற்குமாறாய் நீ நடந்துகொண்டால் மோக்ஷபலனுக்கு விபரீதமான நரகாதி அநர்த்தத்தையே அடைவாய். நான் சொல்லும் இந்த வாக்கியம் ஸ்ரீகிருஷ்ணனுடைய வாக்யமே. இதை அவர் சொன்னபடியே உனக்குச் சொல்லியிருக்கிறேன். என்று இவ்வாறு எல்லாகௌரவர்களின் நடுவில் அக்ரூரன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டும் திருதராஷ்டிரன் அவனுடைய பிள்ளைகளுக்கு ஸ்வாதீனனாகி எல்லோரும் பகவானுக்கு ஸ்வாதீனம், நாங்கள் சுதந்திரர்கள் அன்று, அந்த பகவான் பூபாரத்தை நாசம் செய்வதற்காக, பூமியில் அவதரித்திருக்கிறார் என்று சொன்னான். இவ்வாறு திருதராஷ்டிரன் சொன்ன வார்த்தையைக்கேட்டு அக்ரூரன் திருதராஷ்டிரனின் மனம் தோஷங்கொண்டதாயிருக்கிறதென்று அறிந்து உன் பிள்ளைகள் பிழைத்திருக்கப் போவதில்லை என்று சொல்லி பீமார்ஜுனருடன் கூடி ஸகாதேவனை அழைத்துக்கொண்டு அவனுடைய மதுராபட்டணத்திற்கு வந்தார். பீமசேனன் அர்ஜுனன் இவர்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியிடமிருந்து

அவர்களுக்கு அருகமானதாயுள்ள பகவத் விஷயகமான ஞானத்தை ஸம்பாதித்து உத்தமமான காரியங்களால் சிரேஷ்டர்களாய் அவர்களுக்கு யோக்கியமான கர்மாக்களை செய்துகொண்டு யாதவர்களால் பூஜிக்கப்பட்டவர்களாய் ஸ்ரீகிருஷ்ணருடனே கூட மதுராபட்டணத்தில் வாஸம் செய்தனர். ஸ்ரீகிருஷ்ணர் எனக்கு கதாவித்தையை உபதேசம் செய்யும் பக்ஷத்தில் நான் வித்யாப்யாஸ காலத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் முன் கதாயுதத்தை எடுத்துத்தூக்க வேண்டியதாகிறது. அந்த பகவத் அபசாரத்தை நான் செய்ய மாட்டேன், என்று பீமசேனர் அபிப்பிராயப் பட்டு ஸ்ரீகிருஷ்ணனின் ஆக்ஞையின்பேரிலேதான் அவர் பார்த்திருக்கும் பொழுது பலராமரிடமிருந்து கதாவித்தையை அப்யஸித்தார். பலராமன் சக்ரதாரியான ஸ்ரீகிருஷ்ணரால் தனக்கு கற்றுக்கொடுக்கப் பட்டதான கதா வித்தையை ஸ்ரீகிருஷ்ணரின் எதிரில் பீமசேனருக்கு உபதேசம் செய்தார். பிறகு இந்திர புத்திரனான அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து உத்தமமான அஸ்திரத்தை ஸம்பாதித்தான். ஸகாதேவன் உத்தவனின் முகமாய் உத்தமமான சகல நீதியையும் கற்றறிந்தான்.

## கோகுலத்திற்கு உத்தவனின் தூது.

பிறகு உத்தம நீதிக்ஞனான உத்தவனை கோகுலத்திற்கு அனுப்பும்போது ஸ்ரீகிருஷ்ணர் இவ்வாறு சொல்லியனுப்பினார். ஹே உத்தவா சீக்கிரமே பிருந்தாவனத்திற்கு செல், நான் சொல்லும் வாக்கியங்களால் நந்தகோபாதிகளுக்கு என்னை விட்டு பிரிந்ததாலுண்டான துக்கத்தை பரிகாரம் செய், இந்த என்னுடைய வியோகமென்பது யாருக்குமில்லை. நான் எல்லாப் பிராணிகளின் ஹிருதய கமலத்தில் இருக்கிறேன். நான் மனுஷ்யனென்று உங்களுக்கு எப்போதும் எண்ணமிருக்கவேண்டாம். என்னை தோஷமற்ற குணபரிபூர்ண வஸ்துவாகிய பரபிரம்மம் என்று கர்க்கமுனி முதலான ஞானிகள் சொல்லுகின்றனர். முன்பு ஸரஸ்வதியின் நதிக்கரையிலுள்ள வனத்தில் ராத்திரிகாலத்தில் ஓர் மலைப்பாம்பு நந்தகோபனை விழுங்கியது. எல்லா கோபாலகர்களும் நந்தகோபனை தப்புவிக்க முடியவில்லை, என்னுடைய பாதஸ்பரிசத்தால்



அந்த மலைப்பாம்பு தேவலோக வாஸியான வித்யாதரனானான். அந்த வித்தியாதரன் சொன்ன எல்லா வாக்யங்களையும் இப்போது ஞாபகத்திற்கு அவர்களைக் கொண்டுவரும்படி நீ ஞாபகப்படுத்து. ஸுதர்சனன் என்ற அந்த வித்யாதரன் அவனுடைய சரீரஸௌந்தர்யத்தின் மதத்தால் முன்பு தினம் தவம்செய்து அதனால் மிகவும் மெலிந்திருந்த விகாரரூபமுள்ளவரான அங்கிரஸ் ரிஷி குமாரரான பிராம்மணரைப் பார்த்து பரிகசித்தான். அவருடைய சாபத்தால் அக்ஷணமே சுதர்சனனென்ற வித்தியாதரன் மலைப்பாம்பாய் பிறந்து என்னுடைய பாதஸ்பரிசத்தால் மறுபடியும் வித்யாதரனுடைய ரூபத்தை அடைந்து நந்தகோபனைப் பார்த்து இவ்வாறு பேசினான். இந்த கிருஷ்ணன் மனுஷ்யன் அல்ல. இவன் ஸாக்ஷாத் ஸ்ரீஹரி, ப்ரம்மாதிகளைவிட உத்தமன் ஜகதீசுவரன். எல்லா ஜகத்துக்கும் காரணன். ஸ்வதந்திரன், இந்த ஸ்ரீகிருஷ்ணனை இவ்வாறு அறிந்து வைராக்யங்கொண்ட ரிஷிகள் அனாதியான ஸம்ஸாரத்தினின்றும் முக்தர்களாகி ஸ்ரீகிருஷ்ணனுடைய இரண்டுசரணங்களை அடைகின்றனர். என்றிவ்வாறு அந்த வித்யாதரன் சொல்லிப் போன வார்த்தையை ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி நந்தகோபாதிகளுக்குச் சொல். வருணனுடைய தூதனான ஓர் அஸுரன் நந்தகோபனைப் பிடித்து வருணலோகம் கொண்டுபோனபொழுது வருணலோகம் போயிருந்த என்னை வருணபகவான் விசேஷமாய் பூஜித்து நந்தகோபனை அவிழ்த்து விட்டு ஹே நந்தகோபா! இந்த ஸ்ரீகிருஷ்ணன் உன் மகனன்று, பரமபுருஷனான பகவான்தான் என்று சொன்னார், அந்த வருணனுடைய வாக்யத்தையும் அவனுக்கு ஞாபகப்படுத்து, உற்பத்தியற்ற நான் மனுஷ்யன் என்று கோபாலகர்களுக்கிருந்த புத்தியை நீக்குவதற்காக யமுனையின் மடுவில் வைகுண்டலோகத்தை நான் காட்டினேன், அந்த வைகுண்டத்தில் உத்தமமான என்னுடைய நிலையையும் காட்டினேன், ஆகையால் என்னிடம் மனோதார்ட்யத்தை அடைந்து கோபாலகர்கள் துக்க ஸமாதானத்தை அடையட்டும், என்று பரமபுருஷனான ஸ்ரீகிருஷ்ணனுடைய இந்த வாக்கியத்தைக் கேட்டு உத்தவன் பிருந்தாவனத்திற்குச் சென்றான். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் வாக்கியங்களால் நந்தகோபன் முதலான கோபாலகர்களின்

எல்லா துக்கத்தையும் நிவிருத்திசெய்து மறுபடியும் ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதத்தின் ஸமீபம் வந்து சேர்ந்தான்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்தபகவத்பாதாள் இயற்றிய
ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் ஸ்ரீகிருஷ்ண பாண்டவர்
களின் சரித்திர நிரூபணமாகிய பதினான்காவது
அத்தியாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்பணமஸ்து

---

## பதினைந்தாவது அத்யாயம்.

---

### பீமசேனர் தத்வோபதேசம் பெற்றது.

புருஷோத்தமனான ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு ஜகத்தை ரக்ஷித்துவரும் பொழுது ஸகாதேவனுடன் சேர்ந்த பீமசேனர் அர்ஜுனன் இவர்கள் மூன்று வருஷம் கழித்து ஸ்ரீகிருஷ்ணனிடமிருந்து விடைபெற்று ஸ்ரீகிருஷ்ணகுமாரனான விசோகனுடன் ஹஸ்தினாநகருக்கு திரும்பிவந்தனர். அந்த விசோகனென்பவன் ஸைரந்திரியான த்ரிவக்ரை என்பவளிடம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியால் பிறந்தவன். அவன் நாரதருடைய சிஷ்யன். அவரிடமிருந்து ப்ரம்மவித்தையை உபதேசம் பெற்றவன். அவன் பீமசேனருடைய ரதத்தை ஓட்டும் ஸாரதியானான். பிங்களை என்ற தேவி அவளுடைய ஹிருதய கமலத்திலுள்ள பகவானை தன்னுடைய பதியென்றெண்ணி மறு ஜன்மத்தில் த்ரிவக்ரை என்ற ஸைரந்திரியாய் மதுரையில் பிறந்த கம்ஸனிடம் அமர்ந்திருந்தாள். பாஞ்சராத்ராகமத்தை அறிந்திருந்த அந்த விசோகனை பீமசேனர் ஸாரதியாய் அடைந்து மகாசந்தோஷமடைந்தார். பரமாத்மாவான ஸ்ரீவேதவியாஸரிடமிருந்து மீண்டும் பீமசேனர் பரதத்வத்தின் ஞானத்தை உபதேசம் பெற்றார். உத்தமமான கல்வியால் எல்லோரையும் ஜயிக்கும் பீமசேனர் அர்ஜுனாதிகளான தேவாம்சமுள்ளவர்களுக்கு தத்வஞானத்தை உபதேசம் செய்தார். ஸ்ரீஹரிக்கு குறையை அறிவிக்கும் எல்லா சாஸ்திர மார்க்கத்தையும் நிராகரணம் செய்து நிர்துஷ்ட



மானதாயுள்ள விஷ்ணுவுக்கு மேன்மையை எடுத்துக்காட்டும் வழியைக்காட்டினார். அபரிமிதமான ஸ்வரூபமுள்ள பீமசேனர் விளையாட்டாக பலராமனை பாஹு வாக்கு இவைகளால் விளைந்த சண்டையில் ஜயித்தார். அவர் எப்போதும் சிறந்ததும் மேலானதுமான ஞானம் ஸாமர்த்தியம் இவைகளுடன் கூடியிருப்பினும் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீவேதவியாஸர் இந்த ரூபங்களுடனுள்ள விஷ்ணுவிடமிருந்து மறுபடியும் சிரவணம் செய்து மீண்டும் ப்ரதிபை எனப்படும் ஸ்பூர்த்தியையடைந்தார். எந்த பகவானை நித்யம் ஆசிரயம் செய்து வருவதால் லக்ஷ்மீதேவிஎப்போதும் ஸ்ரீ என்ற பெயருடன் இருந்துவருகிறாளோ அந்த விஷ்ணுவை யார்தான் ஆசிரயிக்காமலிருப்பாள். எப்போதும் பகவானை சரணமடைந்திருந்த தர்மபுத்திரரும் வேதவியாஸரிடமிருந்து பகவத் விஷயகமான தத்வ ஞானத்தை ஸம்பாதித்துக்கொண்டார். சரியான தர்மானுஷ்டானம் செய்யும் அந்த ஐந்து பாண்டவர்கள் பகவத்ரூபங்களான ஸ்ரீகிருஷ்ணர் வேதவியாஸர் இவர்களால் கற்றுக் கொடுக்கப்பட்ட ப்ரமேயங்களுள்ளவர்களாய் விசேஷமான ஆனந்தமடைந்தனர்.

### துரோணாசாரியார் தனுர் வித்தை சிக்ஷித்தது.

பரத்வாஜரின் குமாரரான த்ரோணாசாரியார் பணத்தை சேகரிப்பதை விட்டும் பிறரிடமிருந்து யாசனை பெறுவதை விட்டும் களத்தில் சிந்திய நெல்லுகளை வாரி எடுத்து வந்து அதனின்றும் காலக்ஷேபம் செய்வதாகிய சிலோஞ்ச விருத்தி என்ற அவருடைய தர்மத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுது துரோணாசாரியாரின் குமாரரான சிறுவயதுள்ள அசுவத்தாமாசாரியார் துரியோதனாதிகளுடன் சேர்ந்து விளையாடிவரும் சமயம் பால் குடிப்பதற்காக அவருடைய வீட்டுக்கு வந்தார். அவருடைய தாயாரான கிருபீதேவி அசுவத்தாமாவுக்கு பாலென்று மாவைகரைத்து குடிக்கக் கொடுத்தாள். அசுவத்தாமா தினந்தோறும் அதைக் குடித்து விட்டு விளையாட வந்தார். அச்சமயம் பாலை அருந்திவிட்டு விளையாட வந்த துரியோதனாதிகளிடம் தானும் பால் குடித்துவந்ததாய் அசுவத்தாமா சொன்னார். பால் குடித்துவந்ததாய் கூத்தாடி

க்கொண்டிருந்த அசுவத்தாமாவுக்கு துரியோதனாதிகள் இந்த சமயம் சரியான பாலை குடிக்கக் கொடுத்தனர். அசுவத்தாமா அப்பொழுது பால்ருசி இன்னதென்பதை அறிந்துகொண்டார். பிறகு ஒருநாள் வழக்கப்படி அவருடைய தாய் பாலென்று மாவை கரைத்து குடிக்கக் கொடுக்க அசுவத்தாமா இது பால் அன்று என்று ரோதனம் செய்தார். அழுதுகொண்டிருந்த மகனைப் பார்த்து பிள்ளையிடமுள்ள வாஞ்சையாலும் பகவானுடைய ப்ரேரணையாலும் உண்டான கருணையால் தூண்டப்பட்டவராய் மகனின் அழுகைக் கண்டு சங்கடப்பட்டவராய் துரோணாசாரியார் ஓர் பசுவை சம்பாதிப்பதற்காக ஆசிரமத்தை விட்டு கிளம்பினார். பிறரிடமிருந்து தானம்பெறுவதை விட்டிருந்த த்ரோணாசாரியார் பகவானிடமிருந்து ப்ரதிக்ரஹம் செய்தால் தோஷத்திற்கு காரணமாகாது என்றும் அந்த பகவான் எல்லா ஜகத்திற்கும் தந்தையும் ஸ்வாமியும் குருவும் ப்ரதானமான தெய்வமும் ஆவார் என்றும் இந்த அபிப்பிராயத்துடன் பரசுராமரிடம் ஓர் பசுவுக்காக சென்றார். ஜமதக்னிபுத்திரான பரசுராமர் துரோணாசாரியார் தன்னிடம் வருவதைக் கண்டு இவரை பூபாரத்தைத் தொலைப்பதில் ஓர் காரணமாகச் செய்ய வேண்டும். இவர் இவருடைய குமாரனை அசுவத்தாமாவுடன் சேர்ந்து மனுஷ்ய ஜன்மாவைப் பெற்றிருந்தும் தேவர்களைக் கொல்லப் போகிறார் என்று ஆலோசித்தார். தேவாம்சம் பெற்றவர்கள் பாண்டவர்களின் சகாயார்த்தமாய் ப்ராணனை விடும் பக்ஷத்தில் ஸம்ஸாரத்திலேயும் ஆனந்தத்தின் விருத்தி உண்டாகும். கலியுகத்தில் பிறக்கும் ஜனங்கள் அநேகமாய் மகாபாபிஷ்டர்களாகின்றனர். ஆகையால் தேவர்களின் வம்சம் கலியுகத்தில் இருக்க அருகர்களன்று. தேவர்களின் வம்சத்தில் பிறப்பவர்கள் நாலுதலைமுறைவரையில் பாபத்திற்கு யோக்யமானவர்களன்று. நிர்துஷ்டமானதும் அநேகமானதுமான தேஜஸ்ஸைக்கொண்ட தேவர்களின் சந்தானம் காரணமின்றி நாசமடைவது உசிதமில்லை. எல்லா தேவதைகளின வம்சம் நாசமடையாமலிருந்தால் கலியுகத்தின் காரியங்கள் நடைபெறமாட்டாது. ஆகையால் அசுவத்தாமாவுடன் கூடியிருந்த துரோணாசாரியாரால் வீரர்களான எல்லா தேவாம்சம் பெற்றவர்களையும் கொல்லவேண்டும்.

(தொடரும்.)



# ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

## தரங்கிணியின் உற்பவம்.

ஸ்ரீவியாஸராஜரிடம் ஒரு ஸமயம் ஸ்ரீமான் ஆத்யம் ராமாசாரியாரென்ற ஓர் மகாவித்வான் வந்து சாஷ்டாங்கம் நமஸ்கரித்து "மகாஸ்வாமி! தங்களிடம் நான் வேதாந்த காலக்ஷேபம் செய்ய இச்சைப்படுகிறேன். அனுக்ரஹிக்கவேண்டும். உபாயனமாக அதாவது பேட்டி ஸாமானாக அடியேன் இயற்றிய இந்நூலை கொண்டுவந்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளவேண்டு"மென்றார். ஸ்ரீவியாஸராஜர் இது என்ன கிரந்தமென்று கேட்க மகாஸ்வாமி! தாங்கள் இயற்றிய நியாயாமிருதம் சந்திரிகை தர்க்கதாண்டவம் என்ற மூன்று கிரந்த ரத்னங்களில் ஒன்றாகிய நியாயாமிருதத்திற்கு கண்டனமாக மதுஸூதன ஸரஸ்வதியென்ற ஓர் அத்வைதி அத்வைத ஸித்தி என்னும் ஓர் கிரந்தத்தை இயற்றியிருக்கிறார். அதற்கு கண்டனமாக தரங்கிணி என்ற ஓர் நூலை நான் இயற்றியிருக்கிறேன். தாங்கள் சொல்லியிருக்கும் விஷயங்களைத்தான் ஒருவாறு சேர்த்து பரபக்ஷ கிரந்தங்களைக் கண்டித்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொண்டு அனுக்ரஹிக்கவேண்டுமென்றார். அப்பொழுது ஸ்ரீ வியாஸராஜரின் வயது தொண்ணூறு இருக்கக்கூடும். அவருடைய புருவச்சதைகள் கண்களின்மீது தொங்கிப்போய் கண்களை மறைத்திருந்ததால் கண்களின் அடிப்புறத்தில் சிறு வெள்ளிக்கம்பியை நிறுத்தி மேல் சதையை உயரத்தூக்கி அந்த நூலை சிரமப்பட்டு பல இடங்களில் வாசித்துப்பார்த்து பரமாநந்தமடைந்தார். என் பரம விருத்தாப்யத்தில் என் கிரந்தத்திற்கு கண்டன கிரந்தம் கிளம்பியதே! சிறிது காலத்திற்குமுன் கிளம்பியிருக்கலாகாதா என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேன். ஈச ப்ரேரணையின்பேரில் நீங்கள் சரியாக கண்டனம் எழுதியிருக்கிறீர். இதனால் நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். உங்கள் இந்த கிரந்தம் மிகவும் ப்ரஸித்தியடைந்து நீங்கள் தரங்கிணீ ஆசாரியரென்றே ப்ரக்யாதராகப்போகிறீர். நீர் பெரிய வித்வானாயிருந்தும் என்னிடம் பாடம் கற்க அபேக்ஷிக்கிறீர். நான் பரம விருத்தனாயிருக்கிறேன். என் நண்பர் மகானுபாவரான ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் தற்போது திருக்கோயிலூரில் இருக்கிறார். அவரிடம் சென்று நான் உங்களை அனுப்பித்ததாய்ச்சொல்லுங்கள். உங்களிடம் அவர் விசேஷமாய்

அனுக்ரஹம் செய்வாரென்று ஆத்யராமாசாரியாருக்கு மிக்க மரியாதை செய்தனுப்பினார். அவ்வாறே ஆத்யராமாசாரியார் ஸ்ரீரகூத்தம ஸ்வாமிகளிடம் சென்று ஸச்சாஸ்திரங்களை சிரவணம் செய்து ஜகத்விக்யாதரானார். இந்த தரங்கணியை ஏகசக்ர நகரவாஸியான பிரம்மாநந்தரென்ற ஓர் கௌடஜாதியார் லகு சந்திரிகை என்ற ஓர் கிரந்தத்தை இயற்றி கண்டிக்க ஆத்யராமாசாரியாரின் சிஷ்யரான வனமாலாமிச்ரரென்பவர் தரங்கிணீ கண்டனமாகிய அந்த கௌட ப்ரம்மாநந்தீயத்தை ஸௌரபமென்ற ஓர் கிரந்தத்தை இயற்றி வெகுவாய் கண்டித்துவிட்டார். ஆகவே துவைதிகளின் வனமாலாமிச்ரீய கிரந்தந்தான் அத்வைதிகளின் வாத கிரந்தங்களின் மீது இதுவரை யாவராலும் கண்டிக்கப்படமுடியாமல் க்ஞான உலகில் ஜொலித்துவருவதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியதவசியமாகும்.

ஸ்ரீவியாஸராஜரின் மகிமை அபாரமானது, சொல்லவும் மாளாதது. மந்த்ர சாஸ்திரங்களில் கரைகண்டவராதலால் பெரும் பூதங்களெல்லாம் அவருக்கு தொண்டுபுரிந்துகொண்டு பல்லக்கை சுமந்துவந்ததாய் சில சரித்திரங்கள் அறிவிக்கின்றன. வனப்ரதேசங்களில் இவரை வளைத்து களவாடவந்த கள்வர்கள் இவரை நமஸ்கரித்து இவரிடமிருந்து முத்திரைகளைப் பெற்றதாயும் சொல்லப்படுகிறது. இவர் ப்ரஹலாதரின் அவதாரமென்றும் ஆதிசேஷனின் அம்சம் பெற்றவரென்றும் ஸ்ரீபுரந்தரதாஸர் அறிவித்துள்ளார். இவர்தான் லோக பூஜ்யரான ஸ்ரீராகவேந்திரராய் அவதாரம் செய்தவரென்று பல பெரியோர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். இப்படி மகா மகிமை பொருந்தி அநேக அற்புத லீலைகளைக்காட்டி ஸ்ரீவியாஸராஜர் தமது 93-வது வயதில் கி. பி. 1539 வருஷத்தில் பால்குண பஹுள சதுர்த்தி குருவாரத்தன்று தன் பாஞ்சபௌதிக சரீரத்தைத்துறந்து பரமபாவனமான துங்கபத்திரா நதிக்கரையில் நவபிருந்தாவனமெனப்படும் திவ்யஸ்தலத்தில் பிருந்தாவனஸ்தராகி ஸமஸ்த பக்தகோடிகளால் ப்ரதிதினம் அவரவர்களின் வீட்டில் ஹஸ்தோதகாதி ஆராதனையால் அர்ச்சிக்கப்பட்டவராய் ஸர்வமங்களத்தையும் அளித்துக்கொண்டு லோகபூஜ்யராய் விளங்குகிறார்.

அர்த்திகல்பிதகல்போயம் ப்ரத்யர்த்திகஜகேஸரி /
வியாஸதீர்த்த குருர்பூயாத் அஸ்மத் இஷ்டார்த்த ஸித்தயே //

ஸ்ரீவியாஸராஜரின் சரித்திரம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:

---



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி:)

63. சலாரி நாராயணாசாரியார்.
488 தாத்பர்ய நிர்ணய டீகா. 489. அதிரணார்த்த ஸங்கிரஹம்.
490. ஜாதிநிபந்தம்.

64. விஷ்ணுதாஸாசாரியார்.
491. வாதரத்னாவளி.

65. மங்காலிதர்மாசாரியா .
492. ஷட்பிரச்ன டிப்பணி (மங்காலீயம்)

66. மாயி மத்தேபகும்பாரி வாஸுதேவ ஆசாரியார்.
493. தத்வஸங்க்யான டிப்பணி. 494. பேதோஜ்ஜீவன டிப்பணி.

67. ஆனப்பாசாரியார்.
495. ப்ரமாணபத்ததிடிப்பணி. 497 தத்வஸுதாநிதி.
496. பாகவத வ்யாக்யானம். 498. தத்வநிர்ணய டிப்பணி.
499. பஞ்சகிரந்தி டீகா (நியாயாமிருதம் அத்வைத ஸித்தி தரங்கிணி பிரம்மாநந்தீயம் வனமாலா மிச்ரீயம் இவைகளின் டீகை.)

68. அகோபாலாசாரியார்.
500. சந்திரிகா நியாயஸங்கிரஹம்.

69. மன்னாரு கிருஷ்ணாசாரியார்.
501. சந்திரிகா பாவதீதிதி. 503 சஷகம் ஸுதா டிப்பணி.
502. நியாயாமிருதமாதுரி. 504. சஷகம் தத்வோத்யோத.
505. சஷகம் தர்க்கதாண்டவ டிப்பணி. [டிப்பணி.

70. ஸ்ரீயப்பாசாரியார்.
506. பேதோஜ்ஜீவன டிப்பணி. 508. த்வைதத்யுமணி ப்ரம்மானந்
[தீய கண்டனம்.
507. தத்வோத்யோதடிப்பணி. 509. ஸத்தத்வபேடிகா.
510. தர்க்கதாண்டவ ஸமர்த்தனம்.

71. கங்காமிச்ரர்.
511. த்வாதசஸ்தோத்திர வ்யாக்யானம்.
512. தந்திரஸார வ்யாக்யானம்.
513. பதார்த்த ஸங்கிரஹம்.

## 72. ஸத்யஸந்ததீர்த்தர் (உத்தராதிமடம்).

514. கீதா வ்யாக்யானம்.
515. விஷ்ணுஸஹஸ்ரநாம வ்யாக்யானம்.
516. வால்மீகிராமாயண டீகா.
517. பாரதவிராட உத்யோக பர்வ டீகா.

## 73. ஸத்யதர்மதீர்த்தர் (உத்தராதிமடம்)

518. பாகவததாத்பர்யபாவதீபிகை.
519. பாரத ஸனத்ஸுஜாதிய வ்யா.
520. பாரத உத்யோகபர்வ டீகா.
521. வால்மீகிராமாயண வ்யாக்யா ராமாமிருதம்.
522. அத்வைதகாலாநலவ்யாக்யா
523. யதுபத்பவிவிருதி பாகவதம் 6–12 ஸ்கந்தம்.
524. கங்காலஹரீ.
525. தத்வஸங்கியானடிப்பணி.
526. தத்வநிர்ணயடிப்பணி.

## 74. வித்யாதிராஜதீர்த்தர் (உத்தராதிமடம்.)

527. சாந்தோக்யடிப்பணி.
528. கீதாவிவிருதி.
529. விஷ்ணுஸஹஸ்ரநாம டீகை.

## 75. நரஸிம்ஹயதி (வித்யாதீசரின் சீடர்.)

530. ஐதரேய கண்டார்த்தம்.
531. அதர்வகண்டார்த்தம்.

## 76. ஸுதீந்திரதீர்த்தர் (ஸுமதீந்திரமடம்.)

532. தத்வப்ரகாசிகாடிப்பணி.
533. ப்ரமேயதீபிகாடிப்பணி.
534. ரிக்பாஷியடிப்பணி.
535. பாகவதம் 6-12 ஸ்கந்தவ்யாக்யானம்.
536. சப்தாலங்காரமஞ்ஜரி.
537. ஸுபத்ராபரிணய நாடகம்.
538. ராமதண்டகம்.
539. ஜயதீர்த்தவிஜயம்.
540. ஸாஹித்யஸாம்ராஜ்யம்.
541. யுக்திரத்னாவளி தார்க்க தாண்டவடிப்பணி.

## 77. ஸுமதீந்திரதீர்த்தர் (ஸுமதீந்திரமடம்.)

542. கீதாபாஷியம் பாவரத்னகோசம்.
543. ஸுத்ரபாஷியம் பாவரத்னகோசம்.
544. ரிக்பாஷியம் பாவரத்னகோசம்.
545. வாக்யார்த்த ரத்னகோசம் ஸுதாடிப்பணி.
546. அலங்காரமஞ்ஜரி வ்யாக்யா.
547. உஷாஹரணவ்யாக்யா.
548. நரஸிம்ஹஸ்துதி வ்யாக்யானம்.
549. யோகீந்திரதாராவளி.
550. ராமதாராவளி.
551. ராமதண்டகம்.

(தொடரும்.)



மதராஸ் ஹைகோர்ட் ட்ரான்ஸ்லேடர் ஸ்ரீமான் C. J. ராமச்சந்திராசாரியார், எழுதுவதாவது:—

# ஓர் கண்டனம்.

(முன் தொடர்ச்சி)

இந்த ருத்திரனுக்கு ஸ்மரஹரனென்றும் புத்தருக்கு மாரஜித் என்றும் பர்யாயசப்தம் அமரகோசத்திலிருந்து வருகிறது. இதனால் சங்கராசாரியாருக்கும் புத்தரின் ஸாம்யம் ஏற்படுகிறது. சாஸ்திரியாரின் அபிப்பிராயப்படி இதன் மூலமாயும் அத்வைத மதம் பௌத்தமாகிறது. சாஸ்திரீயமாய் அத்வைத மதம் பௌத்தமதம்தான் என்று ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் ஸாதித்திருப்பதற்கு சாஸ்திரிகளோ அல்லது வேறு எந்த அத்வைதபண்டிதர்களோ யாரும் இது வரையில் பதில் சொல்ல முடியாமல் இருப்பது எல்லோரும் அறிந்ததே.

(7) அதே பத்திரிகையின் 1036-வது பக்கத்தில் ஸ்ரீமத்வாசாரியார் மூன்று அவதாரங்கள் செய்து, ஸ்ரீராமருக்கும் கிருஷ்ண பகவானுக்கும் ஸ்ரீவேதவியாஸருக்கும் சகாயம் செய்ததாய் தனது ஒவ்வொரு கிரந்தங்களின் முடிவில் தவறாமல் எழுதிக்கொண்டிருக்கிறார் என்றும் அது ஆத்மஸ்துதி என்றும், மனிதர்களுக்கு குணங்கள் இருந்தால் அவை தானாகவே பிரகாசிக்கும் என்றும் குணங்கள் இல்லாதவர்கள் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டால்தான் பிறர் தன்னை மதிப்பார்கள் என்று ஸ்ரீமத்வாசாரியார் பிரசம்ஸை செய்து கொண்டனரென்னும் அபிப்பிராயத்தை சாஸ்திரியார் காட்டியுள்ளார். "யதாவஸ்திதவிக்ஞானம் ஆத்மன்யபி நதோஷகிருத்" என்று இருக்கிறது. அதாவது உள்ளதை உள்ளதுபோல் தெரிந்து கொள்வது தோஷமன்று. தான் தெரிந்து கொண்டால் போதுமே, பிறருக்கு ஏன் சொல்ல வேண்டும் என்று ஒரு கேள்வி பிறக்கலாம். விக்ஞானம் என்னும் பதத்திற்கு அன்தர்ணீதணிச் என்னும் வ்யாகரணபிரக்கிரியைப்படி விக்ஞாபனம் என்னும் அர்த்தம் உண்டு. முக்தியோக்யஜீவர்கள் மாயாவாதிகளின் வலையில் அகப்பட்டு அதோகதியடையாமலிருக்கவேண்டுமென்று மிகவும் கருணையோடு தன்னுடைய ஸ்வரூபத்தை தன் சிஷ்யர்களுக்கு வெளிப்படுத்தினார். இது தற்புகழ்ச்சியில் சேர்ந்ததல்ல. ஏனெனில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத்கீதையில், "போக்தாரம் யக்ஞதபஸாம்

ஸர்வலோகமகேசுவரம் | ஸுஹ்ருதம் ஸர்வபூதானாம் க்ஞாத்வா மாம் சரணம்ருச்சதி| மன்மனா: பவ மத்பக்த: மத்யாஜீ மாம் நமஸ்குரு என்று சொல்லியிருக்கிறார். இது ஆத்மபிரசம்சையாகுமோ! கருணைக்கடலான ஸ்ரீகிருஷ்ணபகவான் முக்தியோக்யஜீவர்கள் நல்ல கதியடையவேண்டுமென்ற உத்தேசத்துடன் இதைச்சொல்லியிருக்கிறார். கிருஷ்ணபகவானுடைய மற்றொரு அவதாரமான ஸ்ரீவ்யாசபகவானும் கோஹ்யன்ய: புண்டரீகாக்ஷாத் மகாபாரதகிருத்பவேத் என்று தன்ஸ்வரூபத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருடைய சிஷ்யராய் அவருடைய போதனாமுறையைக் கைகொண்ட ஸ்ரீமன் மத்வாசாரியார் கருணைபுரிந்து தன்ஸ்வரூபத்தை விளக்கி தன்னுடைய குருவின் உக்தியை மேற்கொண்டு, தான் ஸ்ரீவ்யாஸபகவானின் சிஷ்யரென்றும், தான் காட்டும் வழியே நற்கதியடையும் மார்க்கமென்றும் சொன்னது தற்புகழ்ச்சியாகுமா? பிரம்மத்தின் குணங்களையெல்லாம் களவாடும் அத்வைதிகள் அஹம் பிரம்மாஸ்மி என்று சொல்வது தற்புகழ்ச்சியாகாதா? ஸ்ரீமத்வாசாரியார் தற்புகழ்ச்சி செய்துகொண்டாரென்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், ப்ரம்மத்தின் குணத்தை அபகரிக்கும் பரஸ்வாபஹார தோஷத்தைவிட இது ஓர் தோஷமாகாது. சுகாசாரியார் பாகவதத்தில் தான் ஸ்ரீவேதவ்யாஸரின் சிஷ்யரென்றும், வைசம்பாயனர் வேதவ்யாஸரின் சிஷ்யரென்றும் சொல்லிக்கொண்டிருப்பது தற்புகழ்ச்சியாகுமா? பாகவதாதி கிரந்தங்களை சாஸ்திரியார் படனம் செய்யவில்லையா என்ன? எதை எழுதினாலும் பதில் எழுதுபவர்களில்லையன்றோ, அல்லது பூலோகத்தில் பண்டிதர்களே இல்லை என்றோ சாஸ்திரியாரின் அபிப்பிராயம்போலும். சாஸ்திரியார் இனியாவது வாயில் வந்தபடியெல்லாம் அஸம்பத்தமாகச் சொல்லாமலிருக்கட்டுமென்றும் அதைக் கேட்டு யோக்யர்கள் ஏமாந்து அதோகதியடையாமலிருக்கட்டுமென்றும் இவ்விஷயத்தில் நான் இவ்வாறு எழுதினேன். தமோயோக்யர்களுக்கு எவ்வளவு புத்தி புகட்டினாலும் அவர்களுடைய ஸ்வரூபம் மாறாதென்றும் அவர்களுக்கு சத்கதியைக் காட்டுவது ஈசுவரனுக்குச்செய்யும் பெரும் அபராதமென்றும் நினைத்து பலர் இந்த அசம்பத்த பிரலாபங்களுக்கெல்லாம் பதில்எழுத முன்வராமலிருப்பதால் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால் ஸாத்விகர்கள் சாஸ்திரியாரின் துர்கக்ஷியை பொருட்படுத்தாமல் தத்துவத்தையறியும் வழியில் ஈடுபட்டு கிருதார்த்தர்களாகட்டுமென்று பகவானை ப்ரார்த்தித்து தற்போது இந்த வியாஸத்தை முடித்திருக்கிறேன்.



## ஸ்ரீபகவத்கீதை த்வைதபரம்தான்.

(ஸ்ரீஉத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசாரியாராகிய ஸ்ரீஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதாள்.)

---

அத்வைதிகள் சொல்லுகிறபடி பிர்ம்மம் ஸத்யம், பிரம்மத்தைத் தவிர்த்துள்ள பிரபஞ்சம்மித்யை (முக்காலத்திலும் பொய்) கர்மாதிகள் முட்டாள்களை உத்தேசித்துக் கூறியது என்று ஸ்ரீகிருஷ்ணன் உபதேசம் செய்திருந்தால் ஆரம்பத்திலேயே அணைந்துபோகயிருந்த அக்னியில் தண்ணீரை ஊற்றினதைப்போல் அர்ஜுனன் மித்யாபூதமான இந்த பாழும் பிரபஞ்சம், ஜயம், ராஜ்யம் இவை என்ன ஆனால்தானென்ன! என்று நிச்சயித்து ரதத்தில் உட்கார்ந்திருந்ததைவிட்டு கைகால்களை நீட்டிக்கொண்டு நல்ல நித்திரைபுரிந்திருப்பான். த்வைதமதத்திலோ துர்ஜனரை துரியோதனனை வெட்டு திட்டு குத்து முதலானதாயுள்ள வீரியத்தை விருத்திசெய்யும் உபதேசங்கள் அதன் தத்வத்திற்கு பொருத்தமேயாகும். பூபாரத்தைத்தொலைக்க அவதரித்த பரப்ரம்மமாகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸேவையாகிய தர்மயுத்தத்தில் துரியோதனாதி துர்ஜனங்களுடைய ஸம்ஹாரரூபமான வர்ணாச்ரம உசிதமான கர்மத்தை பந்து ஸ்நேகத்தால் அதர்மமென்று விபரீதமாய் அறிந்து பரித்யாகம் செய்த அர்ஜுனன் அபராதம் செய்தவனானதுபற்றி அர்ஜுனனுக்கு இதனால் மகாபுண்யத்தின் நாசமும் பாபத்தின் ப்ராப்தியும் ஏற்படப்போகவிருந்ததால் பக்தர்களின் சங்கடத்தை பரிகரிப்பவரான ஸ்ரீகிருஷ்ணர் "ஹே அர்ஜுனா! நான் பரப்ரம்மம், நீ முதலான எல்லா போர்வீரர்களும் ப்ரீதியால் கட்டுப்பட்ட ஜீவன்கள். ஸ்வரூபத்தால் நித்யர்கள். அவர்களை உன்னுடைய பாணங்கள் ஸம்ஹரிப்பதில்லையாதலால் நீ அவர்களுக்காக துக்கப்படாதே! அவர்களின் தேகநாசம் அவசியம். அவர்கள் துர்ஜனங்களின் பக்ஷபாதிகளாய் என்னுடைய விதியைமீறி விஷ்ணுவைஷ்ணவ த்வேஷிகளாயிருப்பதால் அவர்களுக்கு தேகநாசரூபமான தண்டனை கொடுப்பது எனக்கு ஸம்மதம். ஜஹிசத்ரூம் மகாபாஹோ என்னுடைய த்வேஷிகளான அவர்களிடம் அபிமானம் காட்டி அவர்களைக்கொல்லாமல்போனால் (ராஜத்வேஷியிடம் ப்ரீதிசெய்யும் ஜனங்கள் ராஜத்வேஷியாவதுபோல்) நீ என்னுடைய த்வேஷியாவாய். நீ அவர்களை ஸம்ஹாரம் செய்தால் (அரசனுடைய கட்டளைப்படி ராஜத்வேஷியை சிக்ஷிக்கும் ராஜபடனைப்போல்) என்னுடைய ப்ரீதிக்கு பாத்திரமாகிறாய். என்னுடைய ப்ரீதியால் உனக்கு அதிக லாபமுண்டு. நீ

உன் வர்ணாச்ரமத்திற்கு உசிதமான யுத்தத்தைச்செய். என்னிடம் அர்ப்பணம் செய்து சரணாகதனாய் ஆகும்பக்ஷத்தில் அஹம் த்வாம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி. உன்னுடைய எல்லா பாபங்களையும் சம்பராக்கி உனக்கு ஞானாதிகளைத்தந்து சாசுவதமான ஸ்தானத்தில் வைத்து ஆனந்தப்படுத்துகிறேன். எனக்கு யாரிடமும் பக்ஷபாதமில்லை. அவர்கள் செய்யும் ஸேவைக்குத்தகுந்தபடி நான் பலனைத்தருவேன். நீ யுத்தத்தைப்பரித்யாகம் செய்தால் பாபத்தை அடைவாய். உன்னுடைய முழு பலத்தை உபயோகப்படுத்தி துஷ்டர்களை ஸம்ஹாரித்து அந்த புண்ய பலனை எனக்கு அர்ப்பணம் செய்.” என்றிவ்வாறு மேலான உபதேசம் செய்தது விஷ்ணுப்ரீதிகரமான காரியங்களில் மனுஷ்யனை ஈடுபடச் செய்யும். அர்ஜுனனும் துர்ஜனங்களிடம் ப்ரீதிசெய்ததாகிய தன்னுடைய அபராதத்தை ஒப்புக்கொண்டு சந்தோஷத்துடன் யுத்தத்தில் ப்ரவிருத்திக்கிறான் நஷ்டோ மோஹ: ஸ்மிருதிர் லப்தா ஹே அச்யுதா! என்னுடைய விபரீத ஞானம் போய்விட்டது. என்னுடைய பூர்வ ஞானம் வந்து நான் என் சந்தேகம் தொலைந்துபோய் யுத்தத்திற்கு தயாராயிருக்கிறேன். உன்னுடைய ஆக்ஞையை நிறைவேற்றுகிறேன், என்றான். ஆதலால் தன்னைவிட மேலான ஸத்கர்மத்தின் பலதாதாவான பரப்ரம்மம் ஒன்று தன்னைவிட பின்னமாய் இருப்பதாய் அறிந்தால் விதம் விதமான ஸ்வதர்மானுஷ்டானத்தில் அதிகாரிக்கு ஆஸக்தியுண்டாகுமே யல்லாது நானே ப்ரம்மம் என்னுடைய ஸத்கர்மங்கள் மித்யை என்ற அத்வைததத்வஞானம் சுபாவமாகவே சோம்பேறித்தனத்தை வளர்த்துமென்பதில் சந்தேகமில்லை.

[தற்போது வெளியாயிருக்கும் ஸ்ரீகீதாதத்வத்தின் அதிஅற்புதமான 3-வது பாகத்தில் இதுபோன்ற அநேக வியாஸங்களிருக்கின்றன. ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரெங்கனாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. இப்புத்தகம் இப்பத்திரிகாலயத்தில் கிடைக்கும். சுமார் 400 பக்கங்களைக் கொண்ட பூரா விலை ரூ 1—8—0 தற்போது ஸ்ரீவிஷ்ணுதான் ஸர்வோத்தமர், ஜகத்ஸத்யமே, ஜீவப்ரம்ம அபேதம்தான், ஜீவன்கள் ஸ்ரீஹரியின் அதீனர்கள் என்ற நான்கு பாகங்கள் தயார். உடனே ஆர்டர் செய்யுங்கள்

ப—ர்.]

---



## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# மணிமஞ்ஜரி.

### ஐந்தாவது ஸர்க்கம்.
(முன் தொடர்ச்சி.)

### வேதவித்தையைக்கெடுக்க அஸுரர்களின் மந்த்ராலோசனை.

(1) பாண்டவர்களின் பேரனான பரீக்ஷித்துராஜனின் வம்சம் க்ஷேமகனென்ற அரசனுடன் முடிவடைந்தது. அச்சமயம் கலியுகம் ஆரம்பமாகி ஆயிரம் வருடமாகியிருந்தது. ஸ்ரீகிருஷ்ணர் பீமஸேனர் இவர்களிடமிருந்து வேதாந்த தத்வத்தை கற்றறிந்தவர்களும் அதை ஜனங்களில் பரவச்செய்யும்படி ஆக்ஞாபிக்கப்பட்டவர்களுமான துர்வாஸர் முதலிய பரமஹம்ஸ வகை ஸந்யாஸியார்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் மற்றொரு ரூபமான ஸ்ரீவேதவியாஸரை ஆச்ரயித்து அவரிடமிருந்து மற்றும் சாஸ்த்ராப்யாஸம் செய்துகொண்டு பாசுபதாதி ஆகமங்களையும் அவைகளின் துஸ்ஸம்பிரதாயங்களையும் கண்டித்து எங்கும் ஸத்சாஸ்திரங்களும் ஸத்ஸம்பிரதாயங்களும் நிலைநிற்கும்படி செய்துவந்தனர். (2) இவ்வாறு கிருஷ்ணர் பீமஸேனர் இவர்களின் ஆக்ஞையை அவர்கள் பூமியை விட்டுப்போனபின்பும் துர்வாஸாதிகள் நடத்திவருவதைக்கண்டு கிருஷ்ண பீமஸேனர்களிடம் மகாத்வேஷத்தைக்கொண்டிருந்த கலி சகுனி த்வாபரன் சாணக்யன் முதலான அஸுரர்கள் மிகவும் வருத்தமடைந்தனர். அவ்விருவர்களுடன் நேரில் யுத்தம் செய்து அவர்களைக்கொல்ல முடியாமல் அவர்களாலேயே கொல்லப்பட்டுப்போனதன் நிமித்தம் அவர்களை ஹிம்ஸிக்க அவர்களுக்கு ஸம்மதமில்லாதவைகளைச்செய்ய எண்ணினர். அதற்கு தங்கள் வசனங்களாகிய ஆயுதங்களைக்கொண்டு விதண்டை ஜல்பம் முதலான வாதங்களைச் செய்து அவர்கள் ப்ரியமாய் நினைத்திருக்கும் வேதத்திற்கு வேண்டுமென்றே தப்பான வியாக்யானம் செய்து அதன் தத்வார்த்தத்தைக் கெடுக்கவேண்டுமென்று விரும்பினர். (3) இந்த இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள என்ன செய்யலாமென்று

யோசிக்க அசுரர்கள் எல்லோரும் தங்கள் பாதாள உலகில் இரகசியமாய் தேவர்கள் அறிந்துகொள்ளாவண்ணம் ஓர் ஸபையைக் கூட்டினர். உலகில் எது செய்யத்தகாததோ அந்த அகாரியத்திலேயேதான் அவர்களின் புத்திசெல்வது சுபாவம். அப்பேர்பட்ட இந்த அஸுரர்கள் கிருஷ்ண பீமசேனர்களில் விரோத புத்திகொண்டு ஒன்றுகூடி ஒவ்வொருவரும் தன்னுடைய புத்தி போனபடிக்கெல்லாம் இந்த விஷயத்தில் யோசனை சொன்னார்கள். (4) அச்சமயம் த்வாபரயுகத்தின் அபிமானியான அஸுரனான சகுனி நாஸ்திகமதத்தை வெளியிட்ட சார்வாகனின் தம்பியான சாணக்யாஸுரனால் பிரேரிபிக்கப்பட்டு அவன் எதை தத்வமென்று அறிந்திருக்கிறானோ அந்த மதத்தை அனுஸரித்ததாய் பின்வருமாறு பேசினான். (5) எங்கள் அஸுரகுலத்திற்கு பரமவைரிகள் இருவர். அவர்கள் யாரெனில் ஒருவர் கிருஷ்ணர் மற்றொருவர் பீமசேனர். கிருஷ்ணனின் பராக்கிரமமோ சகிக்கமுடியாதது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். பீமசேனரை எதிர்க்கவோ நாம் எவ்வளவு பாடுபட்டும் அவரால் கொலைப்பட்டுபோவோமேயன்றி எங்களால் ஒன்றும் முடியவில்லை. ஆதலால் அவ்விருவர்களுடன் நாம் யுத்தத்தில் நின்று அவர்களைத்தாக்குவதேது? அவ்விருவர்கள் அஸுரர்களென்போரைக் கண்ணால்கண்டாலுமே போதும். அவர்களை உடனே யமலோகத்திற்கு அனுப்பிவிடுகின்றனர். இதில் சற்றும் சம்சயமில்லை. (6) ஆகவே எங்களுக்கு மகா சத்ருக்களான இந்த கிருஷ்ணபீமசேனர்களை நாம் பழிக்குப்பழி வாங்கவேண்டியதவசியம். யுத்தம் செய்து அவர்களை ஹிம்சிக்கமுடியாத நாம் வேறொருமார்க்கமாய் அவர்களை ஹிம்சிக்கலாம். அதை சற்று கவனியுங்கள். இந்த ஜகத்திற்கு ஸர்வோத்தமமான தெய்வமும் எல்லோராலும் பூஜிக்கப்படுகிறவராயுமிருப்பவர் பரப்ரம்மமாகிய ஸ்ரீகிருஷ்ணர்தான். அவருடைய விஷயமாய் ஜகத்திற்கு தத்வோபதேசம் செய்யும் முக்ய குரு ப்ராணபதியான வாயுபகவானாகிய பீமசேனர். பீமசேனரின் பாரியையும் த்ருபதராஜனின் மகளுமான த்ரௌபதி ஸாக்ஷாத் வேதவித்தைக்கு அபிமானியான பாரதிதேவி. வேத சாஸ்திரங்களுக்கு தப்பான வ்யாக்யானங்களைச்செய்து அவை



சென்னை-600 008

களின் உண்மையான தாத்பரியங்கள் [illegible] நாசம் செய்தால் வேதவித்தையாகிய த்ரௌபதி சங்கடப்படவும் அவளிடம் அன்புகொண்ட கிருஷ்ணன் பீமசேனன் இவர்கள் அதைத் தாளாமல் மிகுந்த துக்கத்தை அடைவார்கள்தான். மேலும் வேதங்களின் தத்வார்த்தம் வெளியானால்தான் கிருஷ்ணனை பரப்ரம்மமென்று அறிந்து எல்லோரும் பூஜிப்பார்கள். ப்ரமாணங்களாகிய வேதங்களை நாம் நாசம் செய்துவிட்டால் அவருடைய மகாத்மியத்தை அறிவதெப்படி? ஜனங்கள் பூஜிப்பதுதான் ஏது? கிருஷ்ணனை ஜனங்கள் பூஜிக்காமல்போனால் அவர் மிகுந்த சங்கடத்தை அடைவார். ஜனங்கள் வேதாத்யயனம் செய்யாமலும் ஸரியானபடி அர்த்தம் செய்துகொள்ளாமலும்போனால் பீமசேனனுக்கு குருத்வம் என்பதேது? அவர் சங்கடப்படவேண்டியதுதான். ஆகையால் எங்கள் இந்த சத்ருக்களை இவ்வாறுதான் ஹிம்சிக்கவேண்டும். 7. இதற்கு நாங்கள் செய்யவேண்டியதுயாதென்றால் எங்களில் சில அஸுரர்கள் பூமியில் பிறக்கவேண்டும். வேதங்களை சரியானபடி ப்ரவசனம் செய்துகொண்டிருக்கும் பிரஸித்த வித்வான்களுடன் சேர்ந்துகொள்ளவேண்டும். வேதங்களுக்கு தப்பான அர்த்தம் செய்து அவைகளை பாழாக்கிவிடவேண்டும். 8. வேதங்களின் உண்மையான அர்த்தத்திற்கு மாறாக அர்த்தத்தைச் சொல்வதோடு நிற்காமல் அதற்கு நேர்விரோதமான அர்த்தத்தையே சொல்லி அதுதான் சரியான அர்த்தமென்று ஸாதிக்கும் பலவகை சாஸ்திரங்களை பிரம்மாண்டமாய்ச் செய்யவேண்டும். வ்யாப்திகளில்லாத அனுமானங்களைக்கொண்டும் குச்சிதமான அனுமானங்களைக்கொண்டும் வேதவித்தையை எப்படியாவது கெடுத்துவிடவேண்டும். 9. கிருஷ்ணன் பீமசேனன் இவர்களை சங்கடப்படுத்தவே விருப்பங்கொண்ட எங்களுக்கு வேதத்தால் என்ன பயம். ஜனங்கள் எங்களை வேதத்தை நம்பாத நாஸ்திகர்களென்று சொன்னால் சொல்லட்டுமே. ஆனால் கண்ணிற்கு படாத புண்யம் பாபம் ஸ்வர்க்கம் நரகம் முதலிய யாவற்றையுமேபொய் என்று சொல்லும் சார்வாக சாஸ்திரத்தால் கண்ணிற்படாதவைகளை பிரமாணமாகக்கொள்ளும் வேதசாஸ்திரம் அடிபட்டு அழிந்துபோயிருக்குமே என்று எண்ணவேண்டாம். ப்ரத்

ய்க்ஷிகொன்றையே [illegible]ணமாகக்கொண்டு வேறு ஒன்றையும் பிரமாணமாகக்கொள்ளாத அந்த சார்வாகமதத்தில் ஜனங்களுக்கு விசுவாசமேற்படாமல் அதை ஆதரிப்பதில்லை. 10. நியாயசாஸ்திரத்தை இயற்றிய அக்ஷபாதனுங்ய கௌதமனும் சரியே, வைசேஷிக சாஸ்திரத்தை இயற்றிய கணாதனும்‡ சரியே, விஷ்ணுவின் அவதாரமாகிய கபிலமூர்த்தியைத்தவிர மற்றொருவனான யோக சாஸ்திரத்தை இயற்றிய கபிலனெனப்பெயர்கொண்ட அஸுரனும் சரியே, மற்றும்பலரும் சரியே அனேக சாஸ்திரங்களைச் செய்திருப்பினும் ஸ்பஷ்டமாய் அவர்களின் சாஸ்திரங்களில் வேதம் அப்ரமாணமென்று சொல்லி வேதத்தில் ஜனங்களுக்கு த்வேஷம் ஏற்படும்படி செய்யவில்லை. ஆதலால்தான் நாங்கள் தற்போது கொண்டிருக்கும் நோக்கம் நிறைவேறினபாடில்லை.

‡ குறிப்பு:— இந்த சாஸ்திரங்கள் தாமஸ சாஸ்திரங்களென்று பத்ம புராணத்தில் சொல்லியிருப்பதை ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார் வாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதாய் நிச்சயிக்கலாம். புராணத்தில் சொல்லப்படுவதாவது:— பார்வதி உவாச| தாமஸானி ச சாஸ்த்ராணி ஸமாசக்ஷ்வ மமாநக| ஸம்ப்ரோக்தானி ச தைர்விப்ரைர் பகவத்பக்தி வர்ஜிதை: தேஷாம் நாமானி க்ரமச: ஸமாசக்ஷ்வ ஸுரேச்வர|| ருத்ர உவாச| ச்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி தாமஸானி யதாக்ரமம்| தேஷாம் ஸ்மரணமாத்ரேண மோக: ஸ்யாத் க்ஞானினாமபி|| ப்ரதமம் ஹி மயைவோக்தம் சைவம் பாசுபதாதிகம்| மச்சக்த்யா வேசிதைர் விப்ரை: ப்ரோக்தானி ச தத: ச்ருணு கணாதேன து ஸம்ப்ரோக்தம் சாஸ்த்ரம் வைசேஷிகம் மஹத்| கௌதமேன ததா ந்யாயம் ஸாங்க்யம் து கபிலேன வை| திஷணேன ததா ப்ரோக்தம் சார்வாகமதிகர்ஹிதம்| தைத்யானாம் நாசனார்த்தாய விஷ்ணுனா புத்தரூபிணா| பௌத்தசாஸ்த்ரமஸத் ப்ரோக்தம் நக்ன நீலபடாதிகம்|| மாயாவாதமஸச்சாஸ்த்ரம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே| மயைவ கதிதம் தேவி கலௌ ப்ராம்மணரூபிணா| அபார்த்தம் ச்ருதிவாக்யானாம் தர்சயன் லோககர்ஹிதம் | ஸ்வகர்மரூபம் த்யாஜ்யத்வ மத்ரைவ ப்ரதிபாத்யதே| ஸர்வகர்மபரிப்ரஷ்டைர்வைதர்மத்வம் தது்ச்யதே| பரேசஜீவயோரைக்யம் மயாது ப்ரதிபாத்யதே|| ப்ரம்மணோஸ்ய ஸ்வயம் ரூபம் நிர்குணம் வக்ஷ்யதே மயா| ஸர்வஜ ய ஜகதோப்யத்ர மோகனார்த்தம் கலௌயுகே| வேதார்த்தவன் மகா சாஸ்த்ரம் மாயயா அவைதிகம்| மயைவ கதிதம் தேவி ஜகதாம் நாசகாரணாத்|| இதன் தாத்பரியமாவது:—

ஒரு சமயம் பார்வதி பரமசிவனைப்பார்த்து தேவோத்தமா! வேதத்தில் வெகுவாய் நிந்தித்திருக்கும் பஸ்மதாரணம் கபாலம் அஸ்தி சர்மம் இவைகளை தரித்தல் முதலியவைகளை தாங்கள் ஏன் தரித்திருக்கிறீர்.

(தொடரும்)

---



# சங்கர லீலா விலாஸம்.

(முன் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A., அவர்கள் எழுதுவதாவது:—

6. மாத்வர்கள் பாஷண்டிகள். சிவதூஷணையைச் செய்பவர்கள். 7. பவித்ரம்தே என்ற சுருதியில் பவித்ர சப்தம் சக்ரத்தைக் குறிக்கிறது என்று நிகண்டுவில் இல்லாமலிருப்பினும் இருப்பதாய் பொய்யைச் சொல்லுகின்றனர். 8. மாத்வர்கள் பொய்யான சுருதிகளை நிர்மாணம் செய்யும் வஞ்சகர்கள், அவர்கள் அவைதிகர்கள். 9. தத்வவிமரிசையில் செய்யும் இவர்களின் ஆக்ஷேபணை முட்டாள்களின் ஆக்ஷேபணையே. 10. மாத்வர்கள் பௌத்தரின் புச்சத்தை பின்பற்றியவர்கள். இவர்கள்தான் ப்ரச்சன்ன பௌத்தர்கள். 11. இவர்கள் ப்ரச்சன்ன கிருஸ்துவர்களென்பதில் சம்சயமே இல்லை. 12. மாத்வர்கள் உலகத்திற்கு த்ரோகம் செய்தவர்கள் 13. ஞானிகளின் கணக்கில் சேராத சாப்பாட்டுராமனை பீமசேனனை குருவாய் இவர்கள் செய்துகொண்டிருப்பது நகைக்கத்தகுந்ததே. 14. இவர்கள் திதியின் குமாரனை வாயுவை உபாஸிக்கும் தைத்யர்கள் மாயாவிகள். க்ரோதம் மாத்ஸர்யம் இவைகளுடன் சேர்ந்தவர்கள். 15. ஹரதீ ஆசாரியாராகிய ஹரமேட (வாயாடி) ஆசாரியார் ஸாம்பபஜ்ஜனமென்ற நூலில் மூடவார்த்தைகளையே சொல்லியிருக்கிறார். 16. சங்கராசாரியாரின் சரித்திரத்தை வர்ணிக்கும் ஐந்து நூல்களில் எது சரியாக இல்லையோ அதைத்தான் இந்த ஹரதி ஆசாரியார் புரீஷவிவஸநக: என்ற நியாயத்தை அனுஸரித்து பொருக்கி எடுத்துக்கொண்டிருக்கிறார். 17. மணிமஞ்ஜரி க்ரந்தம் செய்தவர் குச்சிதமானவர். 18. மாத்வர்கள் தேவத்ரோகிகள். 19. ஸ்மார்த்தர்களாய் பிறந்து தாம் பிறந்த மதத்தைவிட்ட சண்டாளர்கள். 20. இவர்களின் குருமார்களான வேதவியாஸர் ஹனுமார் பீமசேனர் எல்லோருமே ஜாரர்கள். ஜாரர்களால் பிறந்தவர்கள். 21. மாத்வர்கள் பாகவத வசனத்தை உதாஹரிப்பது நகைக்கத்தகுந்தது. பாகவதம் 18 புராணத்தில் சேர்ந்த

தல்ல 22. ஹரதி ஆசாரியார் அஸுரர். 24. ஸக்ருத்புஞ்க்தே எடுத்து சக்ருத்புஞ்க்தே என்று சொன்னால் சரி 25. ஸத்யம் பிதா முதலான சுருதியை கல்பித்தவதன் (மாத்வன்) ப்ரம்மஹத்தியைச்செய்தவன், சண்டாளன், ப்ருணஹத்யைச் செய்தவன். ஸுராபானம் செய்தவன். 26. ஹரதி ஆசாரியார் பின்பாட்டு பாடும் ஜனங்களின் வஞ்சகப்ரேரணையின் பேரில் பாடினதையே பாடும் பொக்கவாய்காஸர் என்ற பழமொழிப்படி எழுதுகிறவர். நீசமான வார்த்தைகளை ஆடுபவர்.

இம்மாதிரியான அர்த்தத்தை அறிவிக்கும் நிந்தைகளையெல்லாம் சிறிது புத்திசாலித்தனமாய் சாஸ்திரிகள் மொழிந்திருக்கிறார். ஆனால் இவைகளைச் சொல்லிவரும்போதே அவருக்கு சிறிது அச்சமேற்பட்டு தாம் சொன்னவைகளை மழுப்பப் பார்க்கிறார். சுமார் 16 பக்கங்கள் வரையில் மத்வாசாரியாரும் மாத்வரும் தைத்யர்களென்றும் சங்கராசாரியார் பரமசிவன் என்றும் சொல்லிக்கொண்டுவந்து 17வது பக்கத்தில் நான் இப்படியெல்லாம் சும்மா சொன்னேன், இந்த நிந்தைகளுக்கு அர்த்தமில்லையென்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் பார்த்தால் சாஸ்திரிகள் ஒரு ஸமயம் அவருக்கு திப்புசுல்தானைப்போல் அதிகாரமிருக்கும்பக்ஷத்தில் எல்லா மாத்வர்களையும் கொளுத்திவிடுவாரென்று தோன்றுகிறது. மற்றொருசமயம் ஹரதி ஆசாரியாரின் மீதுள்ள ஆக்ரஹத்தால் மாத்வர்களை இவ்வாறு தூஷிக்கிறாரோவென்றும் தோன்றுகிறது. இரண்டு ஸம்பாவிதமே. இவர் தம்முடைய நூலில் நீசர்கள் நிந்திக்கும் க்ராம்யபதங்களை உபயோகப்படுத்தவேண்டியதொன்றுதான் பாக்கி. இதையெல்லாம் கவனித்தால் த்வைதாத்வைதத்தை விமரிசை செய்வது எச்சிலுக்கு அடித்துக்கொள்ளும் நாய்களின் குலைத்தலைப்போல் விஷ்ணு வைஷ்ணவர்களை நிந்திப்பதாகிய க்ராம்யமான காரியத்தில்தான் முடிவதாய் தெரியவருகிறது. இதைக்கண்டு இதரர்கள் நகைக்கின்றனர். ப்ரதிவாதி நீசமான நிந்தனை வார்த்தைகளை ஆடியிருப்பினும் வாதி சரியானவனாயிருந்தால் கேவலம் விஷயங்களைமட்டில் சர்ச்சைசெய்து சரியான யுக்திகளைக்காட்டி பிரதிவாதியின் முட்டாள்தனத்தை எடுத்துக்காட்டவேண்டியதாகும். ப்ரதிவாதி



துராத்மா கெட்டவனென்று சொல்வது அகர்த்தமாகத்தான் முடியும். ஓர் ஆங்கிலேய நூலாசிரியர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

In the intellectual arena if your enemy be but the friend in disguise call him stupid......................call him not wicked." வாதச்சண்டையில் துராத்ம சக்ரவர்த்தியான ஸாக்ஷாத் கலியே வாதத்திற்கு வந்திருப்பினும் அவனை முட்டாளென்றழைக்கலாம், அவனை துராத்மாவென்றழைக்கலாகாதென்று எழுதியிருக்கிறார். இந்த நியாயப்படி ஒழுங்காய் விஷய விசாரம் செய்தால் அதை யார் வேண்டாமென்கிறார்கள். மேலும் வாதமாடுகிறவர்கள் இருதரத்தாரும் ஒப்புக்கொண்ட பிரமாணங்களைக்கொண்டு சர்ச்சை செய்யவேண்டும். அல்லது வேறு பிரமாணத்தை உதாஹரித்தால் அது ப்ரமாணிகமென்று யுக்தியால் ஸாதிக்கவேண்டும். மேலும் உதாஹரித்திருக்கும் பிரமாணங்கள் இருந்துவரும் நூல்களின் பெயரையும் புராணாதிகளாயிருக்கும் பக்ஷத்தில் அதுகாணப்படும் சந்தர்ப்பங்களையும் சொல்லவேண்டும். மேலும் சுருதிகள் ப்ரஸித்தமான ஸ்மிருதிகள் ப்ரம்மஸூத்ரம் கீதை இத்யாதி ப்ரமாணங்களை உதாஹரித்து அதற்கு உபப்ரமாணமாய் இதர புராணங்களை எடுத்துச்சொன்னால் அந்த வாக்யங்கள் தமக்கு ஸாதகமானவைகளென்று யுக்திகளாலும் புராணப்ராமாண்ய விவஸ்தையாலும் நிரூபிக்கவேண்டும் இத்யாதி லோகஸித்த நியாயங்களை விட்டு நிந்தனை செய்தால் மனஸ்தாபம் விருத்தியாவதுடன் கோரமான பாபமும் ஸம்பவிக்கும்.

(2)

சாஸ்திரிகளின் நூலிலுள்ள சில ஆக்ஷேபணைகளுக்கு சுருக்கமாய் நான் பதில் சொல்லுகிறேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரமாணத்தை தான் காட்டுகிறேன்.

. மத்வாசாரியார் ருத்ராதி தேவர்களால் வணங்கப்பட்டவரென்னும் விஷயத்தில் அச்சாயிருக்கும் ஸ்காந்த புராணத்திலுள்ள உடுபிமாகாத்மியம் சம்பூர்ணமும் ப்ரமாணமாகும்.

2. பரமசிவன் ஸர்வோத்தமர் அன்று விஷ்ணுதான் ஸர்வோத்தமர் என்பதற்கு விச்வரூபத்தைப்பார்த்து ஞானியான அர்ஜுனன் விஷ்ணுவான ஸ்ரீகிருஷ்ணனை செய்த ஸ்தோத்திரத்தால்

தெரியவருகிறது. "நத்வத்ஸமோஸ்த்யப்யதிக: குதோன்ய:" (21-43) என்பது பிரமாணம்.

3. ப்ரஹ்லாதன் நாரதன் விபீஷணன் முதலியோர் சக்ர முத்ரையை தரித்துக்கொண்டிருந்தனர் என்று ஸ்ம்ருதி புராண இதிகாஸாதிகளில் சொல்லப்பட்டிருப்பதாய் சொல்வது கட்டுக் கதை என்று 8வது பக்கத்தில் சாஸ்திரிகள் சொல்லியுள்ளார். இது தவறு. பம்பாய் வெங்கடேஸ்வர ஸ்டீம் பிரஸில் அச்சான மார்கசீர்ஷமாஸமாகாத்மியம் ஸ்காந்தபுராணத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:— "த்ருதா நாராயணீ முத்ரா ப்ரஹ்லாதேன புராகலே | விபீஷணேன பலினா த்ருவேண ச சுகேன ச || மாந்தாத்ரா ஹ்யம்பரீஷேண மார்க்கண்டேய முகைர்த்விஜை: | சங்காதிசின்ஹிதைர் சஸ்த்ரைர் தேஹம் க்ருத்வாச சமானத || ஏவமாராத்ய மாம் ப்ராப்தம் ஸமீஹிதபலம் மகத் || (பக்கம் 4)" இதன் பொருள்: பூர்வம் ப்ரஹ்லாதன் தன்பாஹுவில் நாராயணமுத்ரையை தரித்திருந்தான். விபீஷணன், பலிச்சக்ரவர்த்தி, த்ருவன், சுகாசாரியார், மாந்தாதாராஜா, அம்பரீஷசக்ரவர்த்தி, மார்க்கண்டேயாதி ப்ராம்மணர்கள் சங்கம் முதலிய சின்ஹங்களால் சரீரத்தில் முத்ரை போட்டுக்கொண்டு இவ்வாறு என்னை (விஷ்ணுவை) ஆராதித்து அவர்கள் இஷ்டப்படி மகா பலனை அடைந்திருக்கின்றனர். என்று இவ்வாறு அநேக ப்ரமாணங்கள் இருக்கின்றன. அதற்காக மற்றொரு நூல் தனியாக எழுதப்படும்.

4. பவித்ரம் தே விததம் என்ற சுருதிக்கு வேறு அர்த்தமிருப்பதாய் பிருஹன்னாரதீய வசனமிருப்பதாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்த புராணம் எங்கு காணப்படுகிறதென்றும் எந்த அத்யாயத்தில் அது அச்சாகியிருக்கிறதென்றும் அவசியம் சொல்லப்படவேண்டும். அப்படியேயிருந்தாலும் அதற்கு வேறு அர்த்தம் கல்பிக்கப்படலாமாதலால் அது ப்ரமாணம்தான் என்று கொள்வது சந்தேகந்தான். மேலும் ஸ்காந்தபுராணம் மார்கசீர்ஷ மாஸமாகாத்மியத்தில் பவித்ரமென்ற சுருதி தப்தசக்ர முத்ரா தாரண விஷயத்தில்தான் ப்ரமாணமென்று சொல்லப்பட்டிருக்கிறது:—

(தொடரும்.)



# காடகோபநிஷத்.

## முதலாவது அத்யாயம் மூன்றாவது வல்லி.

(முன் தொடர்ச்சி.)

அர்த்தாபிமானிகளான மேற்கண்ட தேவிகளைவிட மனதின் அபிமானிகளான ருத்திரன் கருடன் சேஷன் இவர்கள் உத்தமர்கள். இந்த தேவர்களைவிட புத்தித்த்வாபிமானியான ஸரஸ்வதி உத்தமமானவள் ஸரஸ்வதியைவிட மகத்தத்வாபியான பிரம்மா உத்தமர். (11) சதுர்முகனைவிட ப்ரக்ருதியின் அபிமானியான மகாலட்சுமி உத்தமி. அவ்யக்ததத்வமாகிய மாலட்சுமியைவிட பூர்ணராய் இருப்பதன் நிமித்தம் புருஷரெனப்பெயர்கொண்ட விஷ்ணு உத்தமர். அந்த புருஷ நாமக பரமாத்மாவைவிட உத்தமமான வஸ்து யாருமில்லை. அவர்தான் தேவர்களின் தாரதம்ய கிரமம் முடிவடையும் ஸ்தானம். அவர்தான் எல்லோராலும் முக்யமாய் அடையக்கூடியவர். (12) இப்பேர்பட்டவரான பரமாத்மா என்னும் ஓர் வஸ்து இருக்குமேயானால் அவர் ஏன் கண்ணிற்படலாகாதென்றால் அவர் எல்லா பிராணிகளிலேயும் கூடமான ரூபமுள்ளவனாயிருந்து கண்ணிற்படுவதில்லை. ஆனால் அவரை அபரோக்ஷம் செய்துகொள்ள ப்ரயத்னம் வீண்தானே வெனில் அவர் சிரவணம் மனனம் முதலானவைகளால் ஜனிதமான பகவத் ப்ரஸாதத்துடன் சேர்ந்திருக்கும் சூக்ஷ்மமான புத்தியைக்கொண்டு சூக்ஷ்ம திருஷ்டியுள்ளவர்களால் பார்க்கப் படுகிறார். (13) மேற்கூறியபடி பின்னே சொல்லிய தேவர்களை விட முதற்சொல்லிய தேவர்கள் உத்தமர்களென த்யானம் செய்யவேண்டுமென்று தேவர்களில் தாரதம்யம் சொல்லப்பட்டது. அப்படி உத்தமர்களென்றுமட்டில் அறிந்துகொண்டால் போதாது. உத்தமர்களுக்கு அதமர்கள் அதீனரென்றும் எல்லோரும் பரமாத்மாவின் அதீனர்களென்றும் த்யானம் செய்யப் படவேண்டுமென்கிறார். பின்னடி கூறப்பட்டவர்களான சந்திரன் முதலான தேவதைகளை வாக்கின் அபிமானிகளான ஸௌபர்ணி முதலான தேவிகளில் யோஜனம் செய்யவேண்டியது. அதாவது ஸௌபர்ணி முதலான தேவிகளின் அதீனர்களென்று த்யானம்

செய்யவேண்டும்’ அந்த வாக்கின் அபிமானிகளான ஸௌபர்ணி முதலானவர்களை மனஸ்ஸின் அபிமானிகளான கருடசேஷ ருத்திரர்களுக்கு அதீனர்களென்று த்யானம் செய்யவேண்டும். அந்த மனோபிமானி தேவர்களான கருடாதி மூவர்களை ஞானாபிமானிகளான ஸரஸ்வதி பாரதி இவர்களுக்கு அதீனர்களென்று த்யானம் செய்யவேண்டும். ஞானாபிமானியான ஸரஸ்வதி பாரதி இவர்களை மகத்தத்வாபிமானிகளான ஆத்மசப்தத்தால் சொல்லப்படும் பிரம்மா வாயு இவர்களுக்கு அதீனர்களென்று த்யானம் செய்யவேண்டும். மகத்தத்வாபிமானியான இவ்விருவர்களை அவ்யக்தாபிமானியான லக்ஷ்மீதேவிக்கு அதீனர்களென்று த்யானம் செய்யவேண்டும். அந்த லக்ஷ்மீதேவியை ஸாகரூபியான பரமாத்மாவுக்கு அதீனர்களென்று த்யானம் செய்யவேண்டும். (14) என்றிவ்வாறு நசிகேதருக்கும் யமதேவனுக்கும் நடந்த ஸம்வாதத்தைச்சொல்லி வேதபுருஷன் ஹிதோபதேசம் செய்வதாவது ஹே ஸாதுக்களே! பலவகையான விஷய சிந்தைகளைவிட்டு விழித்தெழுங்கள். ஆலஸ்யத்தை விடுங்கள். ஆசாரியர்களிடமிருந்து வரணைப்பெற்று பகவத்ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளுங்கள் பகவத்ஸ்வரூபத்தை ஏன் அறியவேண்டும்; ஸம்ஸாரபந்த நிவிருத்தியானது வேறு உபாயத்தாலாகாதோவென்றால் ஸம்ஸாரமோ தீக்ஷ்ண்யமான கத்தியின் முனையைப்போல் மிகவும் கூர்மையாய் அநேகமாய் துக்கத்தைத்தரக்கூடியது. பகமத்ஞானத்தை ஸம்பாதித்துக்கொள்ளாமல் வேறு எந்த உபாயத்தாலும் அதைத்தாண்டமுடியாது. அப்படியாயின் ஆசாரியனுடைய உபதேசமேனென்றால் அந்த ஸம்ஸார நிவிருத்தியைத்தரும் ப்ரம்மம் வைராக்யம் பக்தி முதலான அங்கங்களுடன் சேர்ந்த ஆசாரியனால் ஏற்படும் சிரவணம் மனனம் த்யானமாகிய மார்க்கத்தால் மிகவும் கஷ்டப்பட்டு அந்த அறியவேண்டியவர். அப்படியே மிக்க ப்ரயாசையால் ஸம்பாதிக்கவேண்டிய அர்ச்சிராதி மார்க்கத்தால் மிகவும் ப்ரயத்னம் செய்து அடையவேண்டியவர் என்றிவ்வாறு ஞானிகள் சொல்லுகின்றனர். அவருடைய ஞானமும் அவரை அடைவதும் ஸுலபமான உபாயத்தால் முடியாது. இவைகளைத்தவிர வேறு உபாயத்தால் நிச்சேஷமாய் பந்த நிவி



ருத்தி ஏற்படாது. ஆகவே விழித்தெழுங்களென்று சொல்லப்பட்டது. (15) பரப்ரம்மம் சுலபமாய் ஏன் அறியத்தகுந்தவரன்று என்றால் அந்த ப்ரம்மம் ஸப்தகுணமில்லாதவர். ஆகவே சப்தத்தால் அறியமுடியாதவர். அவர் அத்யாஸ்சர்யமான வஸ்து. ஸ்பர்சகுணமில்லாதவர். ஆகவே த்வக்குக்கு விஷயமல்ல அவர் ரூபகுணமில்லாதவர். ஆகவே கண்ணுக்குப்படுகிறவரன்று. பாஞ்சபௌதிகரூபமில்லாதவராதலால் நாசமற்றவர். ரஸகுணமில்லாதவர் ஆகவே ரஸனேந்திரியத்துக்கு அவர் விஷயரன்று. அவர் நித்யம் கந்தமுள்ளவரன்று. ஆகவே அவர் க்ராணேந்திரியத்துக்கு விஷயமாகார். ஆதலால் அவர் ஸுலபமாய் அறியக்கூடியவரல்ல. பந்தநிவிருத்தியைத்தரும் ஞானம் எப்படி உண்டாகிறதென்றால் ஆத்யந்தமில்லாதவரும் மகத்தத்வாபிமானியான சதுர்முகனைவிட உத்தமமானவரும் எப்போதும் ஒரேவகையாயிருப்பவரும் பின்னுடி தாரதம்யப்படி ஸர்வோத்தமனாய் கூறப்பட்டுள்ளவரான அந்த புருஷனை ஆசாரியனின் உபதேசத்தால் சிரவணமனனாதிகளைக்கொண்டு நிச்சயம் செய்து அபரோக்ஷ ஞானம் பெற்று பகவத்ப்ரஸாதத்தை அடைந்து ஸம்ஸார பந்தத்தினின்றும் முக்தனாகிறான். பகவான் சப்தாதிகளால் அறியப்படமுடியாமலிருப்பினும் ஸரியான ஆசாரியனின் ஸகாயத்தால் ஏற்பட்ட சிரவணம் மனனம் த்யானம் இவைகளை ஆவிருத்தி செய்வதால் ப்ரஸன்னனாய் தன்னுடைய அபரோக்ஷத்தைத்தந்து ஸம்ஸாரத்தினின்றும் விடுவிக்கிறார். (16) இவ்வாறு வேதபுருஷன் யமனுக்கும் நசிகேதருக்கும் நடந்த சம்பாஷணையைச்சொல்லி ஸாதுக்களுக்கு சிக்ஷையை அறிவித்து இந்த வித்தையை சிரவணபடனம் செய்வதால் ஏற்படும் பலனைச்சொல்லுகிறார். யமதேவனால் சொல்லப்பட்டதாயும் புராதனமானதாயுள்ள இந்த நாசிகேதோபாக்யானத்தை பாடம் சொல்லுகிறவனும் சிரவணம் செய்கிறவனுமான ஞானி வைகுண்டம் முதலான விஷ்ணு லோகத்தில் பூஜிக்கப்படுகிறான். (17) மிகவும் ரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளவேண்டிய இந்த உபாக்யானத்தை ப்ராம்மணர்களின் கூட்டத்திலும் பித்ருச்சிராத்த காலத்திலும் யார் அடக்கமுள்ளவனாய் சிரவணம் செய்கிறானோ

கிணறு கேணி முதலிய ஜலபூர்ணமானவைகள் இல்லாதிருந்தால் ரஜோதோஷமிருந்தாலும் நதிகளில் ஸ்நானம் செய்யலாம். அசுவத்த விருக்ஷத்தின் நிழலில் நதியில் ஸ்நானம் செய்தால் அந்த நதிப்ரவாகம் ப்ரயாகைக்கு ஸமானமாகும்; அங்கு ஸ்ரீஹரியின் ஸன்னிதானம் அதிகம் தர்பமில்லாமல் செய்யும் ஸ்னானமும் உதகமில்லாமல் செய்யும் தானமும் எண்ணிக்கையில்லாமல் செய்த ஜபமும் நிஷ்பலமேயாகும். ஆதலால் பவித்ரதாரணம் மிகவும் அவசியம். (தொடரும்.)

## செய்தித்திரட்டு.

கோயமுத்தூர் மத்வஸித்தாந்த புபுத்ஸு ஸபையின் ஆதரணையின் கீழ் 17-8-32 முதல் 3 நாட்கள் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்ய தின மஹோத்சவம் கொண்டாடப்பட்டதென்றும் ஸ்ரீமவே வைத்ய ரங்காசாரியார் தெக்கலூர் கிருஷ்ணாசாரியார் விஜயீந்திராசாரியார் முறையே மூன்று நாட்களும் ஸ்ரீராகவேந்திரரின் மகாமகிமைகளைப்பற்றி விரிவாய் உபன்யஸித்தனரென்றும் ஸ்ரீமான் நரஸிம்மாசாரியார் தாஸர் பதங்களைப் பாடினரென்றும் ஸ்ரீமான் T. G. கோகுலசந்திரால் அறிவிக்கிறார்.

பண்ருட்டி ஸ்ரீகுருராகவேந்திரஸ்வாமிகளின் ஆராதனை ஸபையின் ரூல்களை சீர்திருத்த உத்தேசித்திருப்பதாகவும் இதுபோன்ற இதர ஊர்களிலுள்ள மாத்வஸ்தாபனங்களின் ரூல்ஸ்களை தயவுசெய்து தமக்கு அனுப்பினால் உபகாரமாயிருக்குமென்றும் அச்சபையின் காரியதரிசி ஸ்ரீமான் R. ரகூத்தமராவ் அறிவிக்கிறார்.

தாக்தோணி வெங்கடாஜலபதிக்கு சிராவணமாதத்திய மகா சமாராதனை உற்சவங்கள் வழக்கப்படி மாத்வ கனவான்களால் நடத்தப்பட்டதென்று ஸ்ரீமான் நாராயணாசாரியார் அறிவிக்கிறார்.

கும்பகோணம் ஸ்ரீசக்கிரபாணிஸ்வாமி கோவிலின் தென்புறத்திலுள்ள பெரியகடைத்தெருவிலுள்ள ஸ்ரீஆஞ்ஜனேயஸ்வாமி தேவாலயத்தை இந்நகர் ஸ்ரீமான் S.R. சுந்தரமய்யரவர்கள் சுமார் 4000 ரூ. செலவழித்து உயர்த்தி அதிஅற்புதமாய் கட்டி 7-9-32 புதவாரத்தன்று மாத்வர்களைக் கொண்டு தந்திரஸாரமுறைப்படி வெகு ஸம்பிரமமாய் கும்பாபிஷேகம் நடத்தினரென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கும்பகோணம் வியாஸராயர் அக்கிரஹாரத்தில் ஸ்ரீமவே. ஆத்யம் பாகவதரங்கனாதசாரியாரின் கிருஹத்தில் ஸ்ரீமான்களான மைசூர் நரஹரிதாஸர் கிருஷ்ணதாஸர் இவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு பிரதி குருவாரமும்



மாத்வ ஸம்பிரதாயப்படி ஸ்ரீ ஹரிபஜனையை நடத்திவரும் ஸ்ரீஹரிதாஸ பஜனை ஸபையின் ப்ரதமஸம்வத்ஸரோத்ஸவத்தை 18-8-32 குருவாரம் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்யதினத்தன்று மேற்படி ஸபையாரால் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் மாலை 4-மணிமுதல் 6-மணிவரையில் ஸ்ரீமவே பாரதவிம்ஹம் வித்யாபூஷணம் காமே ராமசந்திராசாரியார் அவர்களால் ஸ்ரீராகவேந்திரரின் திவ்ய சரித்திரம் வெகு அழகாய் உபன்யஸிக்கப்பட்டதென்றும் 6-மணிமுதல் இரவு 10½மணி வரை உலகப்பிரஸித்தரான ஹொண்ணாலி பீமதாஸரவர்களின் பௌத்திரரான ஸ்ரீமான் பாகவதர் திம்மண்ணதாஸர் அவர்களால் தத்தாத்ரேய ஜன்மம் என்கிற அனஸூயா சரித்திரம் ஹரிகதாகாலக்ஷேபம் வெகு ஸௌக்யமாய் செய்யப்பட்டதென்றும் உபன்யாஸத்தின் முடிவில் ஸ்ரீமவே பாகவத ரெங்கனாதாசாரியாரால் இச்ஸபை ஏற்பட்டதின் காரணமும் அதன் நோக்கம் பூர்த்தியடைவதின் விபரமும் சுருக்கமாய் சொல்லப்பட்டு வந்தனோபசாரம் செய்யப்பட்டதென்றும் மனோஹரமாய் ஜோடிக்கப்பட்டிருந்த முத்துவிமானத்தில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சித்திரப்படம் அழகாய் அலங்கரிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசித்தனரென்றும் நமது நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீஉத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகளவர்களின் ஸ்ரீகீதாதத்வத்தில் ஜீவன்கள் ஹரியின் அதீனர்கள் என்ற நான்காவது பாகம் முடிவடைந்து அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்ப தயாராகிக்கொண்டு வருதவாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாத்வமித்திரன் காலண்டர்கள் ஆர்டர்களுக்குத் தகுந்தபடி அச்சிடப்பட்டு அவை வெளியான சொற்பதினங்களுக்காகவே செலவடைந்து போனதாய் நாம் அறிவித்தும் அதை கவனியாமல் அநேகர் இன்னமும் அதன் கிரயத்தை அனுப்பி அதை அனுப்பக்கேட்டுக்கொள்வதற்கு நாம் அனுகூலப்படுத்த முடியாமலிருப்பதைக் குறித்து வருந்துகின்றோம்.

## தர்மசாஸ்திர பிரசினை.

பிரசினம்:—

(1) விமோக்ஷ சிரார்த்தம் அவசியம் செய்யப்படவேண்டுமா? (2) செய்யவேண்டியதென்றால் அதை எப்பொழுது செய்யவேண்டும். (3) எந்த காரணத்தினாலாவது அதை அபரிருஷ்ய முன்னாடி செய்யலாமா? (4) அகாரணமாய் அதைச்செய்தால் சிராத்தம் நடந்ததாய் ஆகுமா?

உத்தரம்:— உண்மையின்பி.

(1) விமோக்ஷம் செய்யவேண்டியது அவசியமென்று சொல்லத் தேவையில்லை. (2) இறந்தவருஷத்தின் கடைசிநாள் அதன் காலம். அது அப்தபூர்த்திசிராத்தமெனப்படும். இதில் பித்ரு பிதாமஹப்ரபிதாமஹ உத்தேசம்தான் செய்யப்படவேண்டும். (3) ஊனாப்திகம்வரையில் செய்யவேண்டிய ஷோடச சிராத்தத்திலிருந்து இது தனிப்பட்டதாகையால் அப்தபூர்த்தி சிராத்தமாகிய இது அந்த கடைசி நாளிலேயே செய்யப்படவேண்டுமேயல்லாது அதை அபகர்ஷணம் செய்யக்கூடாதென்பதே எனது அபிப்பிராயம். தர்மஸிந்துவும் அவ்வாறே அபிப்பிராயப்படுகிறது. (தர்மஸிந்து பக்கம் 354 பார்க்க) விவாகாதிவிருத்திநிமித்தமாய் அதை அபகர்ஷணம் செய்கிறவர்கள் அவ்வாறு செய்வதற்கு பிரமாணங்களைக்காட்டவேண்டியதவசியம். (4) இதற்கு தனியதில் தேவையில்லை. அவ்விதியைவிட்டு செய்ததும் செய்யாததும் ஒன்றுதான்.

காபே. ஹயக்ரீவதீக்ஷிதர்.

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 15-9-32 | குருவாரம் | மஹாலய ஆரம்பம். |
| 19-9-32 | சோமவாரம் | மகாபரணி. |
| 22-9-22 | குருவாரம் | மத்யாஷ்டமி. மஹாவ்யதிபாதம். |
| 24-9-32 | சனிவாரம் | அவிதவாநவமி. |
| 26-9-32 | சோமவாரம் | ஏகாதசி. |
| 27-9-32 | மங்களவாரம் | யதித்வாதசி. |
| 29-9-32 | குருவாரம் | ஸர்வபித்ரு அமாவாசை. |
| 30-9-32 | சுக்ரவாரம் | விஷ்ணுபஞ்சக உபவாசம். |
| 1-10-32 | சனிவாரம் | நவராத்திரி ஆரம்பம். |
| 6-10-32 | குருவாரம் | மூலா நக்ஷத்திரம், ஸரஸ்வதி ஆவாஹனம். |
| 8-10-32 | சனிவாரம் | மகாநவமி, ஸரஸ்வதிபூஜை, ஆயுதபூஜை. |
| 9-10-32 | பானுவாரம் | ஸ்ரீமத்வாசாரியாரின் பிறந்ததினம், விஜயதசமி, தஸராபண்டிகை, சிரவண உபவாஸமில்லை, விஷ்ணுபஞ்சக உபவாசமில்லை. |
| 10-10-32 | சோமவாரம் | ஏகாதசி. |
| 11-10-32 | மங்களவாரம் | த்வாதசி பருப்பு உபயோகிக்கக்கூடாத விரதம் ஆரம்பம். |
| 14-10-32 | சுக்ரவாரம் | பௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 17-10-32 | சோமவாரம் | துலாஸ்நான ஆரம்பம். |
| 25-10-32 | மங்களவாரம் | தசமிஹரிவாசரம் இரவு மணி 10-7க்குப் பிறகு போஜனமில்லை. |
| 26-10-32 | புதவாரம் | ஏகாதசி உபவாசம். |
| 27-10-32 | குருவாரம் | தீபாவளி இரவு பண்டிகை, சந்திரோதய காலத்தில் எல்லோருக்கும் அப்யங்கம் அவசியம். |
| 28-10-32 | சுக்கிரவாரம் | தீபாவளி பகல் பண்டிகை. |
| 29-10-32 | சனிவாரம் | அமாவாசை, விஷ்ணுபஞ்சக உபவாசம். |